**PRESS NOTE**

On 13.07.2023 a case in Kanyakumari Vigilance and Anti Corruption was registered by Tmt.T.T.Rema, Inspector of Police against Tmt.Roselin Premalatha @ Latha Chandran, aged 50/2023, W/o Tr.Chandran who was formerly Alloor Town Panchayat President, Kanyakumari District for the indiction that Tmt.Roselin Premalatha amassed Dis-proportionate Assets to the tune of Rs.33,67,322/- during her tenure as President, Alloor Town Panchayat between 2011 and 2016 and investigation was taken up by sleuths of DVAC, Kanyakumari Detachment. As the investigation officer has suspected that there is a possibility of hidden assets at the residence of Tmt.Roselin Premalatha situated at Door Nos.16/61B, 16/61C, Vins College Road, Chunkankadai of Kanyakumari District, today 14.07.2023 after completing all formalities, the sleuths of DVAC, Kanyakumari Detachment conducted a surprise house check at the above residence between 06.00 hrs and 14.00 hrs and cracked 17 documents pertaining to the arraignment against Tmt.Roselin Premalatha and had submitted the seized 17 documents before Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari District.

The investigation is under progress.

**பத்திரிக்கை செய்தி**

கன்னியாகுமரி மாவட்டம் ஆளுர் பேரூராட்சியில் தலைவராக 2011 முதல் 2016ம் ஆண்டு வரை பணிபுரிந்த திருமதி.ரோஸ்லின் பிரேமலதா @ லதா சந்திரன் வயது 50 என்பவர் அவர் பேரூராட்சியின் தலைவராக பணிபுரிந்த மேற்படி காலத்தில் வருமானத்துக்கு அதிகமாக ரூ.33,67,322/- மதிப்புக்கு சொத்து சேர்த்துள்ளார் என்பது முதல் நிலை விசாரணையில் தெரிய வந்ததால் 13.07.2023ம் தேதி ஊழல் தடுப்பு துறை கன்னியாகுமரி பிரிவின் காவல் ஆய்வாளர் திருமதி.டி.டி.ரெமா அவர்களால் கன்னியாகுமரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி திருமதி.ரோஸ்லின் பிரேமலதா என்பவரது வீட்டில் வெளிவராத சொத்துக்கள் இருக்க வாய்ப்பு உள்ளது என்று லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தெரிய வந்ததால் இன்று 14.07.2023ம் தேதி காலை 6 மணி முதல் மதியம் 2 மணிவரை மேற்படி திருமதி.ரோஸ்லின் பிரேமலதா என்பவரது கதவு எண். 16/61B, 16/61C வின்ஸ் கல்லூரி சாலை, சுங்கான்கடை, கன்னியாகுமரி மாவட்டம் என்ற வீட்டில் கன்னியாகுமரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் தணிக்கை மேற்கொண்டனர். மேற்படி தணிக்கையில் வழக்கு சம்பந்தப்பட்ட 17 ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு அந்த ஆவணங்கள் கன்னியாகுமரி மாவட்ட முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தனி நீதிபதி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. இந்த வழக்கின் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.